

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி, பணிக்காலத்தின்போது உயிரிழந்த 311 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பீலா வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி கு. இந்திராணி, இயக்குநர் (பகிர்மானம்), ஏ.ஆர்.மஸ்கர்னஸ் உள்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (09.01.2025) போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், பணிக்காலத்தில் மறைந்த பணியாளர்களின் 4 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கிஸ், இணை மேலாண்மை இயக்குநர் செ.நடராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிக்காலத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்கள்

# 311 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன. 10 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி, பணிக் காலத்தின்போது இறந்த 311 பணியாளர் களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணை களை வழங்கி, மின்வாரிய ஓய்வூதியதா ரர்களின் பயன்பாட்டிற்காக உருவாக்கப் பட்ட புதிய கைபேசி செயலியினை அறிமுகப்படுத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு வாழ்நாள் சான்றிதழ்களை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உத யநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை தமிழ்நாடு மின் சார வாரியத்தின் தலைமையகத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி, பணிக்காலத் தின்போது உயிரிழந்த 311 பணியாளர்க ளின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப் படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பதவியேற்ற 7.5.2021 முதல் இதுவரை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பல்வேறு பதவிகளுக்கான 2,420 பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று வழங்கப்படும் 311 பணி நியமன ஆணை களை சேர்த்து மொத்தம் 2,731 பணியி டங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அகில இந்திய அளவில் தமிழ் நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களில் முதல் முறையாக தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகை யில் புதிய கைபேசி செயலி புதுமையான அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி வாயிலாக, மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர் கள் /குடும்ப ஓய்வூதியதாரர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே தங்க ளுக்கு தேவையான தகவல்களை எளி தாக தெரிந்து கொள்ளலாம்.

இச்செயலி மூலம் ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள்/கருணை ஓய் வூதிய தாரர்கள் தங்களது மருத்துவ காப் பீட்டு அட்டையை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாதாந்திர ஓய்வூதிய விவ ரம், வருடாந்திர ஓய்வூதிய அட்டவணை, வருமான வரி செலுத்துபவர்களுக்கான படிவம் 16 பதிவிறக்கம் மற்றும் அனைத்து பயனுள்ள தகவல்களும் இச்செயலியில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் பெற ஆதார் எண்ணை eKYC வாயிலாக இச்செயலி மூலம் எளிதாக பதிவு செய்யலாம்.

இந்த செயலி மூலம், தமிழ்நாடு மின் சார வாரியத்தில் சுமார் ஒரு இலட்சம் ஓய் வூதியதாரர்கள் பயனடைவார்கள். தமிழ் நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மின்சார வாரிய ஓய்வூதியதாரர்கள் எளி தில் பயன்பெறும் வகையிலான இந்த புதிய செயலியினை அறிமுகப்படுத்தி, மூன்று ஓய்வூதியதாரர்களுக்கு வாழ்நாள் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் வி.செந் தில் பாலாஜி, தயாநிதி மாறன் எம்.பி., எரி சக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக் டர்.பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலை வர் / மேலாண்மை இயக்குநர் க.நந்தகு மார், தமிழ்நாடு மின் தொடர மைப்பு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. கு.இந் திராணி, இயக்குனர் (பகிர்மானம்) ஏ. ஆர்.மஸ்கர்னஸ் மற்றும் உயர் அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

### சேலம் மாவட்டம் – கோட்டையூர், தருமபுரி மாவட்டம் – நட்டனூர் கிராமத்தை இணைக்கும் வகையில்

# மேட்டூர் நீர்த்தேக்கம் மீது பாலம் - திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்தம்!

## சட்டப்பேரவையில் – பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு

**சென்னை, ஜன. 10 -**

**சட்டப்பேரவையில் நேற்று பா.ம.க. - உறுப்பினர் கோ.க.மணி எழுப்பிய கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசிய பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, “முதல்வர்அறிவுரையேற்று - சேலம் மாவட்டம் - கோட்டையூர் - தரு மபுரி மாவட்டம் - ஒட்டனூர் கிராமத்தை இணைக்கும் வகையில் மேட்டூர் நீர்த் தேக்கம் மீது பாலம் கட்டும் பணிக்கான திட்ட அறிக்கை தயார் செய்திட ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.**



சட்டப்பேரவையில் நேற்று இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஜி.கே. மணி:** காவிரி ஆற்றின் குறுக்கே தருமபுரி மாவட்டம் ஒட்டனூர், சேலம் மாவட்டம் கோட்டையூருக்கு இடை யிலே காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட வேண்டுமென்பது மக்களின் நீண்டநாள் கோரிக்கை.

கேரளா மாநிலம் கொச்சின் துறைமுகத் திலிருந்து பாலக்காடு, கோயம்புத்தூர், ஈரோடு வந்து, சேலம் மாவட்டம் கொளத் தூரை அடுத்து காவிரி ஆற்றின் பாலத் தைக் கடந்து, தருமபுரி மாவட்டத்தின் பல ஊர்கள் ஓசூர், பெங்களூரு, மும்பை வரை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளை எல்லாம் இணைக்கிற மிகப்பெரிய முக்கி யத்துவம் வாய்ந்த பாலம் ஆகும். இதைக் கட்டினால் நிறைய மாவட்டங்களுக்கு பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டை மேம்படுத்தும்.

**அமைச்சர் எ.வ.வேலு:** சேலம் மாவட் டம் கோட்டையூர் கிராமத்தையும், தரும புரி மாவட்டம் ஒட்டனூர் கிராமத்தையும் இணைக்கிற வகையில், மேட்டூர் நீர்த் தேக்கத்தின் மேல் கட்ட வேண்டிய பாலம் அந்தப் பாலம். இந்த மேட்டூர் அணையின் தண்ணீர் பிடிப்புப் பகுதியில்தான் இந்தப் பாலத்தைக் கட்ட வேண்டிய ஒரு சூழ் நிலை இருக்கிறது. அதனால் pile foundation போடாமல், அந்தப் பாலத் தூண்களை நிறுத்த முடியாது. அந்த வகையிலே நீர்த்தேக்கத்தினுடைய மேல் பாலத்தினுடைய நீளம் 1.20 கி.மீ. தூரம். அணுகு சாலை என்ற எடுத்துக்கொண் டோம் என்று சொன்னால், 8.0 கி.மீ. அணுகு சாலை. ஆக மொத்தம் 2 கி.மீ. தூரம் அந்தச் சாலை அமைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் தருமபுரி சுற் றுப் பயணத்திலே அந்தப் பாலத்தைப் பற்றி அறிவித்தார்கள். அறிவித்ததோடு மட்டுமல்ல எங்கள் துறைக்கும் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் அடிப்படை யில்தான் தற்போது விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் பணம் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, அந்த ஒப்பந்தம் DPR தயார் செய்வதற்காக தற்போது ஒப்பந்தம் கோரப்பட்டிருக் கிறது.

அதை நல்ல திறமையான கம்பெனி கள் ஒப்பந்தம் எடுத்த பின்பு, அதற்கு விரி வான திட்ட அறிக்கைகள் தயார் செய்யப் பட்டு,அங்கே கட்டுமானம் முடியுமா என்ற கேள்வி இப்போதும் இருந்துகொண்டிருக் கிறது. ஏன் என்றால், தரையில் பாலம் கட் டுவது என்பது வேறு. நீர்ப் பிடிப்பில் பாலம் கட்டுவது என்பது வேறு. ஆக, நீர்ப்பிடிப்பில் பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், pile foundationஐ உறுதிப்படுத்தினால் தான் பாலத்தை சிறப்பாக அமைக்க முடி யும். அதனால், DPR தயார் செய்தவுட னேயே, கட்டமுடியும் என்கிற நிலை வருகிறபோது, முதலமைச்சர் அவர்க ளின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இந்தப் பாலம் கட்டப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# தாம்பரம் - மல்லீஸ்வரி நகரில் மின்மாற்றி அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – எஸ்.ஆர்.ராஜா கோரிக்கை!

***சென்னை, ஜன.9-***

***சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது பேசிய தாம்பரம் தொகுதி கழக உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, “தாம்பரம் மாநகராட்சி, 68வது வார்டு, மல்லீஸ்வரி நகரில் மின் மாற்றி அமைத்திடுவீர்!” என வேண்டுகோள் விடுத்தார்.***

*சட்டப்பேரவையில் நேற்று இதுகுறித்து நடை பெற்ற விவாதம் வருமாறு:-*

**எஸ்.ஆர்.இராஜா:** *தாம்பரம் மாநகராட்சி, 68-வது வார்டு, மல்லீஸ்வரி நகரில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** *தாம்பரம் தொகுதி, 68-வது வார்டு, மல்லீஸ்வரி நகர் பகுதிகளுக்கு 7 மின் மாற்றிகள்மூலம் மின் விநியோகம் வழங்கப்பட்டு வந்த நிலையில், மின் தேவை அதிகரித்த காரணத்தால், கூடுதலாக ஒரு புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி கடந்த*

*11-8-23 அன்று நிறுவப் பட்டு, தற்போது 8 மின்மாற் றிகள்மூலம் மல்லீஸ்வரி நக ரில் உள்ள பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப் பட்டு வருகிறது.*

**எஸ்.ஆர்.இராஜா:** *மாடம்பாக்கம் Substation என்பது 2006 ஆம் ஆண்டு அமைக்கப் பட்டது. அந்தப் பகுதியிலே வீடுகள் கூடுதலாக இருக் கின்ற காரணத்தினால், மாடம்பாக்கம், சிட்லபாக்கம், குறிஞ்சி நகர் போன்ற பகுதிகளில் 2/16 MVA transformer புதிதாக 3 Substations-க்கு கூடுதலாக அமைக்கப்படுமா?*



**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** *தாம்பரம் தொகுதி யினுடைய மின் தேவை அதி கரிப்பின் காரணமாக கணக் கெடுக்கப்பட்டு, 255 புதிய மின் மாற்றிகள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. 15 மின் மாற்றிகள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வரு கின்றன. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பணிகள் துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, தேவை ஏற்ப டின், இந்த ஆண்டு முன்னு ரிமை கொடுக்கப்படும்.*

*எஸ்.ஆர்.இராஜா: Eastern bypass சாலை என்று புதிதாக ஒரு சாலையை நெடுஞ்சா லைத் துறை அமைத்துக் கொண்டிருக்கின்றது. பீர்க் கன்கரணை பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் இருந் தது. அதை உடனடியாக பெருங்களத்தூர் பகுதிக்கு மாற்றுவதற்குண்டான பணி நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. அந்தப் பணியை துரி தமாக முடிக்க வேண்டு மென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கி றேன். அகரம், திருவஞ்சேரி ஆகிய இரண்டு பஞ்சாயத்து களும் மிகப் பெரிய பஞ்சா யத்து. 50 ஆயிரத்திற்கும் மேல் மக்கள்தொகை இருக்கின்றார்கள். 20 ஆயி ரம் குடும்பங்களுக்கும்மேல் இருக்கின்றது. அங்கே புதி தாக ஒரு துணை மின் நிலை யம் அமைக்கப்படுமா என்ப தையும், தாம்பரம் மாநகராட்சிக்கு முன்பாக அமைந்துள்ள underground cable-ஐ செம்பாக்கம், மாடம் பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை மற்றும் முடிச்சூர் போன்ற பகுதிக ளுக்கும் அமைக்கப்படுமா, விடுபட்ட பணிகள் தொட ரப்படுமா?*

*வி.செந்தில்பாலாஜி: தாம் பரம் சட்டமன்றத் தொகுதி யில் மட்டும் 4 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்ப தற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அதற் கான பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. மின் தேவையி னுடைய அளவை கணக்கிடப்பட்டு, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள பகுதிக ளில் ஆய்வு செய்யப்படும். தேவை ஏற்படின், நிச்சயமாக இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படை யில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். ஏற் கெனவே, கூடுதலாக மீண் டும் ஒரு கேள்வியை எழுப்பி யிருக்கின்றார். அதுவும், இன்று அல்லது நாளை அதற் கான அதிகாரிகளை அனுப்பி, தேவை ஏற்பட் டால் அதை அவசியம் செய்து கொடுக்கப்படும்.*

*இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.*



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (09.01.2025) சென்னை, பூங்கா நகரில், தமிழ்நாட்டு திருக்கோயில்கள் மற்றும் உபயதாரர்கள் சார்பில் சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு வழங்குவதற்காக இரண்டாம் கட்டமாக 5 இலட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கும் பணிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், இந்து சமய அறநிலையத்துறைகூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இணை ஆணையர்கள் பொ.ஜெயராமன், திருமதி கோ.செ. மங்கையர்க்கரசி, திருமதி இரா. வான்மதி, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, உதவி ஆணையர் க. சிவகுமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### சவுதி அரேபியாவில் இறந்த

# பெனடிக்ட் ரவி உடல் தாயகம் கொண்டுவரப்பட்டு குடும்பத்தாரிடம் ஒப்படைப்பு!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. நடவடிக்கை!

*சென்னை, ஜன.10*

*திருநெல்வேலி மாவட் டத்தை சேர்ந்த பெனடிக்ட் ரவி அவர்கள் சவுதி அரே பியா நாட்டில் பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த நவம் பர் மாதம் 17-ஆம் தேதி உயி ரிழந்தார்.*

*அவரது உடலை சொந்த ஊருக்கு கொண்டு வந்து இறுதிச் சடங்கு நடத்த வேண்டும் என்று அவர்களது குடும்பத்தார் கேட்டுக் கொண்ட நிலையில் கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுப்பி ரமணியம் அவர்களுக்கு கடி தம் வாயிலாக கோரிக்கை வைத்தார்.*

*அதனை தொடர்ந்து கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி யின் தொடர் முயற்சி மற் றும் சவுதி அரேபியா நாட் டின் கழக நிர்வாகிகளின் ஆதரவுடன் நேற்று பென டிக்ட் ரவி அவர்களின் உடல் தாயகம் கொண்டுவரப் பட்டு குடும்பத்தாரிடம் ஒப் படைக்கப்பட்டது.*

### சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில்

# 3000 நபர்களுக்கு பொங்கல் பரிசு - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

## தயாநிதி மாறன், எம்.பி, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. நா.எழிலன், எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை!

*சென்னை, ஜன. 10-*

*சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:-*

*தமிழர்களின் பண்டிகை யான பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டக் கழக தி.மு.க. சார்பில் இன்று (10.01.2025) வெள்ளிக்கி ழமை மாலை 5.00 மணி அளவில் மாவட்டச் செய லாளர் நே.சிற்றரசு அவர் கள் ஏற்பாட்டின் பேரில் சேப்பாக்கம்-திருவல்லிக் கேணி சட்டமன்ற தொகு திக்குட்பட்ட கழக நிர்வாகி கள், பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் 3000 நபர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா இரா யப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெறு கிறது.*

*இதில் கழக இளைஞர் அணி செயலாளர் மாண்பு மிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் பங்கேற்று கழக நிர்வா கிகள், பாக முகவர்கள் மற் றும் பாக உறுப்பினர்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்று கிறார்கள்.*

*மத்திய சென்னை நாடா ளுமன்ற உறுப்பினர் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், தலைமை செயற் குழு உறுப்பினர் எம்.கே. மோகன்,எம்.எல்.ஏ, கழக மருத்துவர் அணி செயலா ளர் நா.எழிலன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இந் நிகழ்வில் மாவட்ட நிர்வாகி கள் து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஆ.சங் கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி, மாநில நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள் ஏஆர்பி.எம். காமராஜ், எஸ்.மதன்மோ கன், ந.இராம லிங்கம், மா.பா.அன்பு துரை, ச.பரமசிவம், வினோத் வேலாயுதம், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், வட்டக் கழக செயலா ளர்கள், மாமன்ற உறுப்பி னர்கள், அணிகளின் மாவட்ட/ பகுதி/ வட்ட அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி/ வட்ட கழக நிர்வாகி கள், இந்நாள் முன்னாள் கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் என அனை வரும் இன்று மாலை 5.00 மணிக்குள் இராயப் பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட செயலா ளர் நே. சிற்றரசு அறிவித் துள்ளார்.*

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் கூட்டம்! பொங்கல் விழா!

## கழகத்தினருக்கு பரிசுகள் வழங்கி படப்பை ஆ.மனோகரன் சிறப்புரை!

*காஞ்சிபுரம், ஜன.10-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட் டம், குன்றத்தூர் தெற்கு ஒன் றிய அணிகளின் நிர்வாகிகள் - கிளைக் கழக அமைப்பாளர்கள் கூட்டம் மற்றும் கழகத்தின ருக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா நாளை (11.1.2025, சனிக் கிழமை) காலை 10.30 மணியள வில் சி.என்.சி. மஹால் படப் பையில் நடைபெறுகிறது.*

*விழாவில் ப.அறிவொளி, அ.ஜமீர், மலர்விழி தமிழ் அமு தன், சங்கீதா வேலு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.*

*ரா. தீபக், மா.சே.பிரகாஷ், லோ.சுதாகர், இரா.குமரவேல், செ.பார்த்திபன், ஆர்.சையத்ர மிஸ், பொன் இளையபாரதி, இ.பாலாஜி, மகாலட்சுமி எட்டி யப்பன், மல்லிகா நடராஜன், ஷோபா ரகுநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*விழாவில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலா ளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலை மையேற்று பொங்கல் பரிசு வழங்குகிறார்.*

*இதில் மீஞ்சூர் கே.ஜி.பாஸ் கர் சுந்தரம், சரஸ்வதி மனோக ரன், ஏ.வந்தேமாதரம், உமாம கேஸ்வரி வந்தேமாதரம்,*

*குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மு. சுப்பிரமணி, வ.நந்தகோபால், இ.மணி, வாசுகி மகேஷ், சி. பார்த்தசாரதி, வி.அரி, மூ.இரா ஜேந்திரன், மா.பரிமேலழகன்,*

*மாவட்ட அணிகளின் நிர் வாகிகள் பொன். ரமேஷ்கவி, எஸ்.கர்ணன், கு.ஏழுமலை, லட் சுமி ஞானசேகரன், ச.பாலகி ருஷ்ணன், எஸ்.வைரம், ஜி.எ.ராயப்பா, தினேஷ் கந்த சாமி, ம.ரேவதி, வி.எஸ். கோதண்டராமன், கே.என். சி.சத்தியமூர்த்தி, வி.எஸ். இளங்கோ உள்ளிட்டோர் கலந் துகொண்டு சிறப்பிக்க உள்ள னர்.*

*எனவே இக்கூட்டத்தில் ஒன் றிய கழகத்தில் அடங்கிய கிளைக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மகளிர் அணி அமைப்பாளர்கள் தவறா மல் கலந்துகொள்ளுமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*பொருள்: பொங்கல் விழா, 2026 சட்டமன்றத் தேர்தல், கழக வளர்ச்சிப் பணிகள்.*

*நன்றியுரை: ஒன்றிய இளை ஞர் அணி துணை அமைப்பா ளர் க.பா.ஆடலரசு.*